*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(4), 2020*

# முறைசார் மற்றும் முறைசாரா கல்வி முறைகள்: ஓர் ஒப்பீடு

**ரீ.எல். அப்துல் கபீர்**
**வருகை விரிவுரையாளர் (கல்வியியல்)**
**சமூக விஞ்ஞானத் துறை**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: abdulkabeertl@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பின்னணியில் தொழிற்படும் கல்வி முறைகள் குறித்து விளக்குகின்றது. கல்வி வழங்கப்படும் நோக்கங்கள் மற்றும் அவற்றின் கட்டமைப்பு என்பவற்றை கொண்டு முறைசார் கல்வி, முறைசாரா கல்வி, முறையில் கல்வி என மூன்று நிலைகளில் காணப்படுகிறது. இம்மூன்று கல்வி முறைகளினதும் இயல்புகள், தனித்துவங்கள், அவற்றிற்கிடையிலான தொடர்புகள் என்பனவற்றைக் குறிப்பிடுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒப்பீட்டாய்வு முறை, விபரணப் பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:** கல்வி முறைகள், முறைசார் கல்வி, முறைசாரா கல்வி, முறையில் கல்வி

## 1. அறிமுகம்

கற்றலானது ஒருவரது வாழ்நாள் முழுவதும் இடம்பெறும் ஒரு தொடர்ந்தேர்ச்சியான செயற்பாடாக காணப்படுகின்றது. இக்கற்றலானது தனிநபரின் வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றத்தைக் கொண்டுவரும் ஒரு கருவியாகவும் செயற்படுகின்றது. கற்றல் செயற்பாடுகள் பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்கின்றன என பொதுவாக அனைவரும் கருதுகின்றோம். ஆனால் ஒரு பிள்ளை தாயின் கருவில் இருக்கும் போதே ஆரம்பித்துவிடுகின்றது. இதனைத் தொடர்ந்து குடும்பம், சமூகம், பாடசாலை போன்ற சூழல்களில் இடம்பெறும் கற்றல் செயற்பாடுகள் பிள்ளையின் அறிவு விருத்தியிலும், மனப்பாங்கு, ஆளுமை விருத்தியிலும் முக்கிய பங்கு வகிப்பதோடு இறுதியில் இறப்பில் முற்றுப்பெறுகின்றது.

கல்வி என்பது ஒரு மாறுபடுகின்ற கருத்தாகும். இதற்கான அர்த்தம் காலத்திற்கு காலம் மாறுபடுவதாகக் காணப்படுகிறது. கல்வியின் தன்மை மாறுபடுவது போன்று அதன் நோக்கங்களும் மாறுபடவே செய்கின்றது. இதற்கு காரணம் சமூகத்தின் தேவைகள் வளர்ந்து வருவதால் கல்வியின் நோக்கமும் ஒரு சமூகத்திலிருந்து ஏனைய சமூகத்திற்கு மாறுபடுகின்றது எனலாம்.

கல்வி வழங்கப்படும் நோக்கங்கள், இலக்குகள், ஒழுங்கமைப்புக்கள், செயற்பாடுகளின் அடிப்படையில் கல்வி வழங்கப்படும் முறைகளை நிறுவனம் சார் கல்வி முறைமை, நிறுவனம் சாரா கல்வி முறை என இரு வகைப்படுத்த முடியும். மேலும் கல்வி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு என சமூகம் பல்வேறு நிறுவனங்களையும் முகவர்களையும் விருத்தி செய்துள்ளது. இந்நிறுவனங்களின் அடிப்படையில் கல்வியானது முறைசார், முறைசாரா கல்வி என இரு உப பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது. கல்வி வழங்கப்படும் சகல விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு முறைசார் கல்வி, முறைசாரா கல்வி, முறையில் கல்வி என 3 நிலைகளில் பிரித்து நோக்கலாம்.

இவ்வாறாக கல்வி முறைமையை மூன்றாக பிரித்து நோக்கினாலும் அவை ஒவ்வொன்றின் வகிபாகம் பொதுவாக கல்வியினூடாக தனிநபரின் அறிவை விருத்தி செய்தல் என்பதனையே தனது இறுதி குறிக்கோளாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2. முறைசார் மற்றும் முறைசாரா கல்வி முறைகள்

### *2.1 முறைசார் கல்வி (Formal Education)*

முறைசார் கல்வி என்பது காலக்கிரம அடிப்படையில் திட்டமிடப்பட்டதும், படிமுறையான தரங்களை கொண்டதும், தெளிவான தரப்படுத்தப்பட்ட வடிவங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். இது ஆரம்ப கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலான பல்வேறுபட்ட விசேட திட்டங்களுடனான கைத்தொழில், தொழில்சார் துறைகளை உள்ளடக்கிய முழு நேர கல்வி முறையாகவும் செயற்படுத்தப்படுகிறது. ஒரு தனி நபருக்கு அடிப்படை அறிவின் அமைப்பினை உருவாக்குவது. முறைசார் கல்வியின் முக்கிய குறிக்கோளாக அமைந்துள்ளது.

முறைசார் கல்வியானது தர அடிப்படையிலான முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டது. இதன் பிரதான இயல்புகளாக குறிப்பிட்ட வயது, தர முறை, குறிப்பிட்ட நோக்கம், முறையான பாடவிதானம், முழுமையான நிறுவனக் கட்டமைப்பு, பரீட்சை முறைகள், தர உயர்ச்சி வழங்குதல், நீக்குதல் போன்றன காணப்படுகின்றன. இது ஒழுங்கமைக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

இங்கு குறிக்கோள், உள்ளடக்கம், வழிமுறை ஆகியவற்றின் அடிப்படையில் பாடத்திட்டம் முன் வைக்கப்படுகின்றது. முறையான கல்வி நிறுவனங்கள், நிர்வாக ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டதாகவுள்ளதோடு மாணவர்களின் வருகையிலும் கவனம் செலுத்துகின்றது. பாடத்திட்டங்களின் முடிவில் பரீட்சைகள் இடம்பெறுவது, பயிற்றுவிப்பாளர்களின் கற்பித்தல் பயிற்சி உத்திகள் பொருத்தமானவையா? அவற்றினூடாக அவர்கள் எதிர்பார்த்த குறிக்கோள்கள் அடைய பெற்றுள்ளதா? என்பதை மதிப்பிடவும், பொதுவாக கல்வி முறையினை திறன்மிக் கதாகவும், பயனுள்ளதாகவும் மேம்படுத்துவதற்கும் பங்களிப்பு செய்கின்றது (Kapur, 2019).

முறைசார் கல்வியானது கற்போரிலே அதிக கவனம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இங்கு அறிவுறுத்தல்கள், பாடத்திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இம்முறையில் ஆசிரியர்களின் பணி மாணவர்களுக்கு கல்வியினூடாக அறிவை புகட்டுவதாக அமைவதுடன் அவர்களும் தங்களது குறிக்கோள்களை அடைவதற்கு தேவையான கற்றல் முறைகளை நடைமுறையில் கொண்டுவரவும்முடிகிறது (Kapur, 2019).

#### *2.1.1 முறைசார் கல்வியின் இயல்புகள்*

முறைசார் கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிப்பாளர்களுக்கு (Instructors) கல்வி முறைக்குள் உள்ளடங்குகின்ற கற்றல் கற்பித்தல் முறைகள், அறிவுறுத்தல் சார் உத்திகள், தீர்மானங்களை எடுத்தல், வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், மாணவர்களின் பிரச்சினைகளுக்கு ஏற்ற தீர்வுகளை பெற்றுக் கொடுத்தல், மாணவர்களிடத்தில் ஒழுக்கத்தை மேம்படுத்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதில் தங்களது அதிகாரத்தை பயன்படுத்த முடியும்.

இது கட்டமைக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் இடம்பெறுவதால் இங்கு நூலகம், ஆய்வகம், மைதானம், தொழில் நுட்பங்கள், கணினி மையம், வகுப்பறை, பிற வசதிகள் போன்ற வளங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் கிடைக்கின்றது. இவ்வளங்களினால் கற்போர் தங்களது திறன்களை மேம்படுத்திக் கொள்வதனுடன் சிறந்த ஆளுமையினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இங்கு கல்வி வழங்கப்படும் முறைகள், கல்வியின் நோக்கங்கள், பாடப் பிரவேசம், குறிக்கோள்கள், பாடத்திட்டம் என்பன முறையான வகையில் திட்டமிடப்பட்டு கட்டமைக் கப்பட்டுள்ளது. முறைசார் கல்வி முழுமையாக மாணவர்களின் அறிவு முன்னேற்றத்தினை குறிக்கோளாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் கற்றல் கற்பித்தல் முறைகளில் பயனடைகின்றனரா? அவர்களது கல்வி செயற்பாடுகளில் முன்னேற்றம் உள்ளதா அல்லது

பின்னடைவுகளை எதிர்கொள்கின்றனரா? என்பதனை அடையாளங் காண்பதற்கும் என மதிப்பீட்டு முறை பயிற்றுவிப்பாளர்களினால் பயன்படுத்தப்படுகின்றது (Kapur, 2019).

குறிப்பாக முறைசார் கல்வி நிறுவனங்களினால் வடிவமைக்கப்படும் கல்வித் திட்டங்கள் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டதாக அமைய வேண்டும். குறித்த கால எல்லையினுள் பாடத்திட்டம் முறையான வகையில் பூர்த்தி செய்யப்படுவதோடு எதிர்பார்க்கப்படும் கல்வி நோக்கம், குறிக்கோள் என்பனவும் அடையப்படுதல் வேண்டும்.

முறைசார் கல்வியானது ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என தொடர்ந் தேர்ச்சியான படிநிலை அமைப்பைக் கொண்டமைந்துள்ளது. முறையான கலைத்திட்டம், இணைக் கலைத்திட்டம், மறைக் கலைத்திட்டம் என்பவையும் இக்கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பாடநெறி அறிவோடு மட்டும் நின்றுவிடாமல் ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு தங்களது ஆளுமைகளை மேம்படுத்திக் கொள் வதற்குமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது. இது முறைசார் கல்வியின் ஒருங்கிணைந்த பகுதியாக காணப்படுகிறது.

#### 2.1.2 முறைசார் கல்வி எதிர்நோக்கும் சவால்கள்

முறைசார் கல்வியானது பாடசாலைகளை மையப்படுத்திய மாணவர்களுக்கு அறிவினை வழங்குவதற்கும், முழுச் சமுதாயத்திற்கும் பொருத்தமான கற்றவர்களை உருவாக்குவதற்குமாக தோன்றியதாகும். ஆனால் இன்று செயற்படும் பாடசாலை முறையானது மேற்குலகை பின்பற்றியது என சிலர் குறிப்பிடுவதனால் மூன்றாம் உலக நாடுகளுக்கு சுமையாக அமைகின்ற மேற்குலக கல்வி முறையாக காணப்படுகிறது என்ற கருத்து நிலவுகின்றது. ஒரு தனிநபரை கற்றவர் அல்லது கற்காதவர் என அளவிடும் அளவு கோளாக பாடசாலை சான்றிதழ்கள் அமைந்துள்ளது.

### 2.2 முறையில் கல்வி (Informal Education)

முறையில் கல்வி என்பது குடும்பம், அயலவர்கள், சம வயதினர், ஏனைய சூழல் காரணிகள் என்பவற்றின் மூலம் இடம்பெறும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள், சமூகத்தின் மறைமுகமான செல்வாக்கின் வழியே வழங்கப்படுகின்ற கல்வி முறையாகும். இது கற்றல் நோக்கங்கள், கற்றலுக்கான நேசம், கற்றலுக்கான ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப் படவில்லை. ஒருவர் முறையில் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் சான்றிதழையோ அல்லது எவ்விதமான பட்டங்களையோ பெறுவதில்லை. முறையில் கல்வியானது நோக்கங்கள் நிறைந்ததாகவும் காணப்படலாம். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நோக்கமற்றதாகும். ஒரு தனிநபர் முறையில் கல்வியினூடாக அறிவு திறன்களை புரிந்துகொள்கின்றார், வேலை திறன்களை பெறுகின்றார். இது வெளிப்புறமாக திணிக்கப்பட்ட பாடத்திட்ட அளவுகோல் எதுவுமில்லாத நிலையில் இடம்பெறுவதாக காணப்படுகிறது (Kapur, 2019).

முறையில் கல்வியில் தனிநபர்களின் பங்கேற்பானது இன்றியமையாததாகும். இது அறிவு, உணர்ச்சி, சமூக மதிப்புக்கள், பெறுமானங்கள் என்பனவற்றுடன் இணைந்ததாக காணப்படுகிறது. இக்கல்வி முறையானது குணாதிசயங்கள், சூழல், செயற்பாடுகள், அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் ஒரு தனிநபரால் புரிந்துகொள்ளப்படுகிறது. இங்கு கற்றல் இடம்பெறுதல் என்பது தனிநபர்களின் முக்கிய குறிக்கோளாக அமைந்திராத போதிலும் சூழ்நிலைகளின் அடிப்படையில் கற்றல் மறைமுகமாக ஒருவரிடம் இடம்பெறுகின்றது. முறையில் கல்வி என்பது பொதுவாக எல்லோரது வாழ்விலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களின் வாழ்க்கை பின்ன ணிகளுக்கேற்ப அமைவதோடு இது ஒருவர் பெறும் முறையானக் கற்றலை விடவும் பயனுள் ளதாகவும் அமையும்.

சமூகத்தின் செயல்பாட்டு உறுப்பினர்களாக தனிநபர்களை மாற்றுவதில் முறையில் கல்வி ஒரு முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. முறையில் கல்வியில் காணப்படும் உள்ளார்ந்த (Impartment) அம்சங்களாக செயல்திறனான தொடர்பாடல் (Effective Communication), சமய நம்பிக்கைகள் (Religious Beliefs), பழக்கவழக்கங்கள் (Behavioural Traits), சுகாதாரமும் நல்வாழ்வும்

(Health Care and Well Being), தூய்மை (Cleanliness), மொழிப்பயிற்சி (Training of Language), தன்னம்பிக்கை மற்றும் சுய ஆட்சி உரிமை (Self-Reliance and Autonomy), மோதல் தீர்க்கும் நடைமுறைகள் (Conflict Resolution Procedures), நேர முகாமைத்துவத்திறன் (Time Management Skills), மன அழுத்த முகாமைத்துவ திறன் (Stress Management Skills) போன்றவற்றை குறிப்பிட முடியும் (Kapur: 2019).

#### *2.2.1 முறையில் கல்வியின் முக்கியத்துவங்கள்*

ஒருவர் தனித்தே வாழ்ந்து விட முடியாது. மனிதன் ஓர் சமூகப் பிராணி என அரிஸ்டோடில் குறிப்பிடுவதுபோல மனிதன் தனது பல்வேறு தேவைகளினை பூர்த்தி செய்து கொள்ளும் நிமிர்த்தம் சமூகத்துடன் இணைந்து வாழவே நிர்ப்பந்திக்கப்படுகின்றான். சமூகமானது ஒவ்வொரு தனிநபரினதும் இயலுமைகளையும் (Abilities), திறன்களையும் (Skills) மேம்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட நிறுவனங்களை நிறுவியுள்ளன. இவை தனிநபர்களின் வாழ்க்கையில் குறிப்பிடத் தக்கதொரு பங்கினை வகிக்கின்றது. இங்கு தனிநபர்கள், சமவயதினர், நண்பர்கள், குடும்ப அங்கத்தவர்கள் என்பவரிடமிருந்து தனது திறன்களை வளர்த்துக்கொள்வதற்காக பயிற்சிகளையும் அறிவினையும் முறையில் கல்வி வழியாக பெற்றுக் கொள்கின்றனர்.

முறையில் கல்வியானது குறிப்பிட்டதொரு வயதெல்லை, காலம், குறிக்கோள்கள் என கட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுவதல்ல. இது ஒரு தனியனின் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தும் நடைபெறுவதாக காணப்படுகிறது. இங்கு கிடைக்கப்பெறும் தொடர்ந்தேர்ச்சியான பயிற்சி, அனுபவம் என்பனவற்றினூடாக தனிநபர்களின் வினைத்திறனான அடைவுகளைப் பெறுவதற்கு வழி வகுக்கின்றது. இதனால் தனிநபர் தங்கள் வாழ்நாள் முழுவதும் முறையில் கல்வியினைக் கற்றுக் கொள்கின்றான்.

முறையில் கல்வியின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும் போது, பண்டைய, இடைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் முறையில் கல்வி முறையினூடாகவே சமூகக் கட்டுப்பாடு, பண்பாடு, நாகரீகம், கலாசாரம் போன்றவற்றை மதித்து வாழக் கற்றுக் கொண்டுள்ளனர் எனலாம்.

முறையில் கல்வியானது ஒருவரின் சமூக பங்களிப்புடன் இணைந்ததாக காணப்படுகின்றது. இதன்மூலம் ஒருவர் தான் வாழும் சமூகத்திற்கு இணைந்தவாறு வாழக் கற்றுக் கொள்வதோடு தமது ஆசைகளையும், தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு திறன் பங்களிப்பு செய்கின்றது. முறையில் கல்வியினை வழங்கும் பிரதானமான முறையில் முகவராக (infornal agenties) குடும்பங்கள், சமூதாயங்கள் (communities) காணப்படுகிறது (Kapur: 2019).

தனிநபர்களின் குடும்பம் அவர்களின் கற்றல் நடைபெறும் அடித்தளமாக காணப்படுகின்றது. எனவே ஒருவரின் வாழ்வில் முறையில் கல்வியானது முதலாவதாக ஆரம்பிக்கும் இடமாக அவர்களது குடும்பம் அமைந்து காணப்படுகிறது (Kapur: 2019).

### *2.3 முறைசாரா கல்வி (Nonformal Education)*

முறைசாரா கல்வி என்பது பாரம்பரியமாக காணப்படுகின்ற கல்வி முறைக்கு புறம்பாக நபருக்கு வழங்கப்படும் கல்வி முறையாகும். பிலிப்ஸ் கம்பஸ் என்பவர் குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு இனங்காணப்பட்ட கற்றல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முறைசார் கல்விக்குப் புறம்பாக செயற்படுத்தப்படும் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கல்விச் செயன்முறை முறைசாரா கல்வி வகையினை சார்ந்தது என்கின்றார்.

முறைசாரா கல்வி நிறுவனப்படுத்தப்பட்ட முறையான கல்வி முறைக்கு வெளியே ஒழுங் கமைக்கப்பட்ட கல்வி நடவடிக்கையாகும். இது பரந்தளவான மக்களின் கற்றல் நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளது. முறையான கல்வியானது பாடசாலை, பிற நிறுவனங்களுடன் இணைத்து செயல்படுகின்றது. மறுபுறம் முறைசாரா கல்வியானது சமூகக் குழுக்கள், பிற அமைப்புகளில் பெரிதும் நம்பியுள்ளது (Kapur, 2018 as Cited in Chadha, 2009)

முறைசாரா கல்வியானது கல்வி கொள்கைகள், நிறுவனப்படுத்தப்பட்ட பாடவிதானம் போன்றவற்றில் நெகிழ்வுத் தன்மையினை கடைபிடிப்பதன் மூலம் கல்வி மற்றும் சமூக இலக்குகளை அடைய முடியும் என்ற அனுமானத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது (Romi & Schmida, 2009). இக்கல்வி முறையினை நோக்கும் போது முறைசார் கல்வியினை விட குறைந் தளவினை கட்டமைப்பினையும் கூடியளவிலான நெகிழ்வுப் போக்கினையும் கொண்டதாக முறைசாராக் கல்வி அமைந்துள்ளது எனலாம்.

முறைசாரா கல்வியில் மாணவர்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். இங்கு மாணவர்கள் கற்பது என்ன? எவ்வாறு? எப்போது? யாரிடமிருந்து எங்கே கற்பது? போன்ற விடயங்களை தீர்மானிப்பார். கற்பவரின் விருப்பத்திற்கும் தேவைகளிற்கும் ஏற்றவாறு நெகிழ்வான போக்கினை கொண்டு முறைசாரா கல்விமுறை வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, கற்பவர் தனது முறையினை மாற்றிக் கொள்ளக்கூடிய வசதிகளையும் உள்ளடக்கியுள்ள முறைசாரா கல்வியில் வழங்கப்படும் பாடநெறிகள் அதிகம். தொழில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் வயதெல்லைகளுக்கேற்ப வேறுபட்டனவாகவும் பல்வேறுபட்ட துறைகளைக் கொண்ட பரந்தளவிலும் அமைந்து காணப் படுகிறது. இங்கு தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றது.

பாடசாலை அமைப்பிலிருந்து வெளியேறியோர், வயதானவர்களுக்கு கற்றலின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்களின் திறமையை கற்றல் செயற்பாடுகளின் மீது ஈடுபடுத்துவதுமாக முறைசாராக் கல்வி அமைந்துள்ளது. மேலும் இக்கல்வி முறையானது கற்போரின் வசதிக் கேற்பவும் விருப்பங்களுக்கு ஏற்பவும் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு இதனை முழு நேர கற்கை யாகவும், பகுதி நேரக் கற்கையாகவும் பெறக்கூடியதாக காணப்படுகிறது. முறைசாரா சமூகத்தின் நலனுக்காக நடைமுறையில் உள்ள சமூக ஈடுபாட்டை மேம்படுத்துவதையும், தனிநபர்களின் தேவைகளை வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக இது ஓய்வு நேர நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது. முறைசாரா கல்வியில் தனித் துவமான பண்புகள், பொதுவான உள்ளடக்கம் மற்றும் சிறப்பியல்பு, முறையியல்கள் என்ப வற்றை உள்ளடக்கிய அமைப்புக்களையும் நிறுவனப்படுத்தலையும் அடையாளங் காணக் கூடியதாக உள்ளது (Romi & Schmida, 2009).

Paolo Freire, விகொட்ஸ்கி (Vygotsky), ஜீன் பியாஜே, ஹாவார்ட் கார்ட்னர் (Howard Gardner), டேவிட் க்லோப் (David Kolb), மல்கம் நோல்ஸ் (Malcolm Knowles) மற்றும் பெர்னிஸ் மெக்கார்தி (Bernice Mc Carthy) போன்ற கல்வி சிந்தனையாளர்களின் கோட்பாடுகள் நேரடியாக முறைசாரா கல்வி பற்றி குறிப்பிடவில்லை. எனினும் முறைசாரா கல்வி நுட்பங்களில் பெரும்பாலானவை இவர்களின் கருத்துக்களோடுடன் தொடர்புபடுகின்றது (Dumitru, 2018).

#### ***2.3.1 முறைசாரா கல்வியின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள்***

1. கல்வியின் மூலமாக தனிநபர்களிடையே ஒரு புரிந்துணர்வை (Understanding) அதிகரிப்பதற்கு. இதனால் தனிநபர் மற்றும் அரசினை முன்னேற்ற முடியும்.
2. கல்வி, வேலைவாய்ப்பு, பிற துறைகள் போன்றவற்றை அடைவதில் அனைவருக்கும் சம வாய்ப்பினை வழங்குவதற்கு.
3. தேசத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் மனித வளங்களை மேம்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு.
4. தனிநபர்களிடையே தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் மற்றும் தேசிய திட்டங்களை தயாரிப்பதில் அவர்கள் பங்களிப்புக்களைச் செய்வதற்கும்.
5. சமூகத்தின் நல்வாழ்வை மேம்படுத்தவும் நவீன, அறிவியல் புத்தாக்க முறைகளின் பயன்களை அதிகரிப்பதற்கு.
6. கிடைக்கப்பெறும் வளங்களை அடையாளங் காண்பதற்கும் அவற்றைத் திறன்பட பயன்படுத்தவும் உதவுகின்றது.
7. தனிநபர் மற்றும் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு.
8. உற்பத்திகள், இலாபத்தை மேம்படுத்த முறைசாரா கல்வித் திட்டத்தை உருவாக்குவதற்கு.
9. பாடசாலைகளில் இணையாதவர்கள், பாடசாலைக் கல்வியிலிருந்து விலகியோருக்கு தங்கள் கல்வித் திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குதல்.

10. தனிநபர்களிடையே சிறந்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான முக்கிய அம்சங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

போன்றன முறைசாரா கல்வியின் நோக்கங்களாகக் காணப்படுகிறது (Kapur, 2019).

முறைசாராக் கல்வியின் குறிக்கோள்களை உருவாக்குவதனை நிர்வாகிக்கின்ற ஒரு ஒருமித்த திறந்த கொள்கை இருக்க முடியாது. ஏனெனில் குறிக்கோள் கற்போரிடமிருந்து தோன்றுவதோடு அவற்றின் மீது ஆசிரியர்களும் சூழலும் தாக்கம் செலுத்துகின்றது. முறைசாரா கல்வியின் நோக்கங்களாக UNESCO (APEID, 1978, P.6) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

1. எழுத்தறிவுக்கு முந்தைய கல்வியின் (Pre–literacy education) மூலம் தனிநபர் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு வழிமுறையாக கற்றலை ஏற்றுக்கொள்வது தொடர்பான விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கு.
2. அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கும் அவற்றின் மூலம் வேலைவாய்ப்புக்களை சமமாக விநியோகித்தலும்.
3. தேசிய உட்கட்டமைப்பு தேவைகளை நிறுவுவதற்கும் மனித வள விருத்தியினை வழங்குவதற்கும்.
4. நிகழ்ச்சிகளை திட்டமிடுதல், ஒழுங்கு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் உள்ளடங்கியுள்ள மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ திறன்களின் மூலம் சமூகங்களில் சுய நம்பிக்கையினை கொண்டு வருதல்.
5. தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான தொழில்நுட்பங்கள் சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கு
6. சமூகத்தில் இருக்கும் சாத்தியமான உள்ளூர் விளக்கங்களை ஒன்றுசேர்ப்பதற்கு.
7. விரைவாக தொழில்மயமாகும் சமூகத்தின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையிலான சமூகம் சார் கல்வி திட்டங்களை உருவாக்குவதற்கு.
8. உற்பத்தித் திறன் மற்றும் தெளிவான விளக்கங்களுடன் (gains) நேரடியாக இணைந்த முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல் என்பவற்றை UNESCO முறைசாரா கல்வியின் குறிக்கோளை குறிப்பிட்டுள்ளது.
9. வாழ்க்கை மற்றும் உலகம் குறித்த நேர்மறையில் மனப்பாங்கினை (Positive Attitude) விருத்தி செய்தல்.
10. செயல்பாட்டு எழுத்தறிவு மற்றும் எண் அறிவு என்பவற்றில் சிறந்த அடைவினை பெறல்.
11. விஞ்ஞான கண்ணோட்டத்தின் விருத்தியான அடிப்படை இயற்கை செயல்முறைகளின் அடிப்படையில் புரிதல்.
12. ஒரு குடும்பம், வளர்த்தல், வீட்டை இயக்குதல், வாழ்க்கைக்காக உழைத்தல், குடிமகனாக சிறப்பாக செயற்படுவதற்கான செயற்பாட்டு அறிவு மற்றும் திறனை பெறுதல்.

போன்றன முறைசாரா கல்வியின் குறிக்கோள்கள் எனக் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் Naik (1977) என்பவர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் முறைசார் கல்விக்கு புறம்பான குழுவினருக்கு குறைந்த செயலில் கல்வியினை வழங்குவது முறைசாரா கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் எனக் குறிப்பிடுகின்றனர் (Malik, 1994)

இவ்வாறாக முறைசாரா கல்வி முறையின் குறிக்கோளானது சூழ்நிலைகளுக்கும் காலத்திற்கும் ஏற்ப வேறுபட்டதாக காணப்பட்ட போதிலும் முறைசாரா கல்விக்கு அப்பால் அனைவருக்கும் கல்வியினை பெற்றுக் கொடுத்தல் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

## 8. முறைசார், முறைசாரா கல்வி முறைகளுக்கிடையிலான ஒப்பீடு

முறைசார் கல்வி முறையானது கட்டமைக்கப்பட்டதாகவும் நிறுவனமயப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இது பொதுவாக பாடசாலை, பல்கலைக்கழகம் போன்ற படிமுறையான தரங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவை.

முறைசாரா, மற்றும் முறையில் கல்வியானது ஒருவருக்கு தனது குடும்பம், அயலவர்கள், நண்பர்கள், ஒத்த வயதுக் குழுவினர், சூழல் காரணிகள், சமூக வலைத்தளங்கள் என்பவற்றின் மூலம் கிடைக்கப் பெறுவதோடு, இது முறைசார் கல்விக்கு அப்பாற்பட்டதாகவும் அமைகின்றது. இங்கு ஒருவர் கல்வியினைப் பெறும் முதலாவதும் அடிப்படையானதுமான நிறுவனமாக குடும்பம் அமைந்து காணப்படுகிறது.

முறைசார் கல்வியானது படிமுறையான தரங்களை கொண்டமைந்துள்ளதோடு ஒவ்வொரு தரமும் காலக்கிரமப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவர் எவ்வயதெல்லைக்குள் தனது கல்வியினை தொடங்க வேண்டும் என்ற நியதிகளைக் கொண்டுள்ளதோடு தர உயர்ச்சி முறையினையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முறைசார், முறையில் கல்வியானது வாழ்நாள் முழுவதும் இடம் பெறுவதாக அமைவதோடு ஒருவர் கல்வியினை வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெறும் அனுபவங்களினூடாக பெற்றுக் கொள்கின்றனர். முறைசாரா கல்வியினைப் பொறுத்தவரை இவை தொழில் வழிகாட்டல்களை அடித்தளமாகக் கொண்டுள்ளதோடு இதனை பல்வேறுபட்ட வயதுக்குழுவினர் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் பாடசாலை கல்வியினை விட்டு இடைவிலகியோருக்கு கல்வியினை தொடர மீண்டுமொரு வாய்ப்பினை அளிப்பதாகவும் காணப்படுகிறது.

முறைசார் கல்வியானது பாடவிதானம், பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள் என்பவற்றை சார்ந்து கட்டமைக்கப்பட்டுள்ளது. இது பெறும்பாலான சந்தர்ப்பங்களில் இது பயிற்றுவிப்பாளர்களின் முழுமையான இறயாண்மையினைக் கொண்டவராக செயற்படுவதனால் மாணவர்களை ஆராய்ச்சி, கற்றல் சூழல் என்பவற்றில் வழிநடாத்துவதற்கு பதிலாக செயலற்ற கேட்போராக, பார்வையாளர்களாக மாற்றுகின்றது. மேலும் இக் கற்பித்தல் முறையானது கொடுக்கப்பட்ட தகவல்களைப் புரிந்து கொண்டு தனிநபர் கருத்துக்களை தெரிவிப்பதினை அனுமதிப்பதில்லை. (Oznur Isir Yarkatas, & Metin INCE: 2016).

முறைசாரா கல்விச் சூழலானது தனிநபர்களின் ஆர்வத்தை ஊக்குவிப்பதோடு மாணவர்கள் உறுதியான தகவல்களை (Concerete Information) கையாள்வதோடு மட்டும் நிறுத்திவிடாமல் அவர்கள் கற்றறிந்த விடயங்களுக்கு அப்பால் செல்லவும் அவர்களின் உள்ளுணர்வுகள், பொதுவான புலனுணர்வுகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கின்றன (Oznur Isir Yarkatas, & Metin INCE: 2016). மேவும் முறைசாரா கல்வியானது மாணவர்களிடத்தில் புத்தாக்க சிந்தனைகளை தொழில்நுட்ப துறைகள் போன்றவற்றில் ஆர்வத்தையும் விருத்தியினையும் ஏற்படுத்துகின்றது.

முறைசார் கல்வியானது பரீட்சை முறையைக் நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாணவர்களும் தனித்தனியே பரீட்சைகளை எதிர்கொள்வதோடு தனிப்பட்ட பெறுபேறுகளினையும் பெறுகின்றனர். இது மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையினை உருவாக்குகின்றது. மேலும் பாடசாலை, பல்கலைக்கழகங்களில் பெறப்படும் சான்றிதழ்களைக் கருத்தில் கொண்டு முறைசார் கல்வியில் ஒருவரின் கல்வித் தகைமை தீர்மானிக்கப்படுகின்றது.

முறைசாரா, முறையில் கல்வி முறையானது பயிற்சியினைத் தவிர்த்து கற்பவரின் அனுபவத்திலும் அவர்கள் பெறும் தேர்ச்சியிலும் தங்கியுள்ளது. பொதுவாக முறைசாரா கல்வி தொழில் மையமானதாகவுள்ள தேர்ச்சி நிலையினை அளவிட சில சந்தர்ப்பங்களில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

முறையான கல்விச் சூழலில் அந்நியப்படுத்தல் (Alienation) காணப்படுவதாக Harry Cleaver குறிப்பிடுகின்றார். இங்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு, ஆராய்ச்சி நிதி என்பவற்றுக்காக சக ஊழியர்களிடத்தில் அந்நியப்படுத்துவதாக (Alienation) குறிப்பிடுகிறார்.

முறைசாரா கல்வி நடவடிக்கைகளில் பயிற்றுனர், கல்வித்துறை ஊழியர்கள் என்பவர்கள் வெளிப்படையாக காணப்படுகின்றனர். மேலும் ஒரு சூழலில் வெவ்வேறுபட்ட துறையினை சேர்ந்தவர்களின் கருத்துக்களும் ஒன்றிணைகின்றன. மேலும் இங்கு குறைவான கட்டுப்பாடுகள்

காணப்படுவதால் மாணவர்கள், பயிற்றுவிப்பாளர்களுக்கிடையே சிறந்த தொடர்பாடல்களும் இடம் பெறுவதாக உள்ளது. (Oznur Isir Yarkatas, & Metin INCE: 2016).

கல்வி முறையானது முறைசார், முறையில், முறைசாரா கல்வி என பிரித்துப் பார்க்கப்பட்ட போதிலும் பொதுவாக கல்வியின் குறிக்கோள்கள் கல்வியின் மதிப்புக்களுக்கு முன்னுரிமை அளித்து சிறந்த தேர்ச்சி வாய்ந்த சமூகத்தை உருவாக்குவதனூடாக வளமான தேசத்தை கட்டியெழுப்புவதாக காணப்படுகின்றது.

## 4. முடிவுரை

கல்வியானது ஒரு தனியனை சமூகத்தில் சிறந்த பிரஜையாகவும் அறிவு கொண்டவராகவும் நல்லொழுக்கமுடையவராகவும் வாழ உதவுகின்றது. மனிதன் தனது ஒவ்வொரு பருவத்திலும் பல்வேறுபட்ட வகையில் கல்வியினை பெற்றுக்கொள்கின்றான். இந்த கற்றல் செயற்பாடானது ஒருவனிடத்தில் முறைசார், முறைசாரா, முறையில் முறைகளினூடாக இடம்பெறுகின்றது.

முறையான கல்வி என்பது திட்டமிடப்பட்ட வகையில் நிறுவனங்கள், பயிற்சி மையங்களில் ஒரு தனிநபர் பெறும் கல்வியாகும். முறையான கல்வியானது ஒருவரது வாழ்க்கை தரத்தில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் அம்சங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. முறையான கல்வியானது பல சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்கு பயனளிப்பதாக காணப்படுகின்றது. முறையான கல்வியினை வழங்குவதில் கல்வியியலாளர்கள் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதற்கும் முழுமையான கல்விமுறையினை மேம்படுத்துவதற்குமான பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறைகளைக் கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

முறையில் கல்வியானது ஒரு மனிதன் பிறந்த நாளிலிருந்து தொடர்ந்தேர்ச்சியாக வாழ்நாள் முழுவதும் இடம்பெறும் கற்றலாகும். இக் கல்வியை வழங்குவதில் குடும்பம், சூழல் பிரதான இடம் வகிக்கின்றது. இச்சமூக நிறுவனங்களின் மூலம் பெறப்படும் கல்வி ஒருவனது நடத்தை, ஆளுமை, மனப்பாங்கு, பழக்க வழக்கங்கள் என்பவற்றில் செல்வாக்கு செலுத்துவதாகவும் அமைந்துள்ளது.

முறைசாரா கல்வியானது முறையான கல்வி முறைக்கு அப்பால் தனிநபர்களுக்கு வழங்கப்படும் கல்வியாகும். இக்கல்வியின் பிரதானமான நோக்கமாக பாடசாலை செயற்பாடுகளிலிருந்து இடைவிலகியோர், பெரியோர்கள் போன்றோருக்கு அவர்களின் வாழ்க்கைத் திறனை மேம்படுத்தும் வகையில் அறிவு வழங்கும் சந்தர்ப்பம் கற்றலாக காணப்படுகின்றது. முறைசாரா கல்வியானது வளர்ந்து வருகின்ற கற்றல் கலாசாரத்தை மாற்றும் சக்தி வாய்ந்த கருவியாகக் காணப்படுகின்றது.

## உசாத்துணைகள்

Abdul Malik. (1994). *Non Formal and Adult Education in India.* Department of Library and Information Science, Aligara Muslim University. Aligrah, India. Retrived from: https://core.ac.ut/download/pdf/144519262.pdf

Colin Latchem. (2014). *Informal Learning and non formal Education for Development.* Journal of Leaving for Development – JL4D. (1). Refrived from: https://files.eri.ed.gov/fulltext/EJ1106082.pdf

Cristina Tabacaru Dumitru. (2018). *Impact of Non formal Education on the Efficacy of school Learning.* STUDIA UNIVERSITIS MOLDAVIAS. 9(119). P.p 229 – 233. Refrieved from: https://www.researchgate.net/publication/330441242

Didi Mulyadi, Suryadi Suryadi,& Rusi Rusmiati Aliyyah. (2020). *Life Skills Education Program: Is it benificial for the Society?*. Journal of Nonformal Education. 6(2). P.p 101 – 106. Retrieved from: https://www.researchgate.net/publication/34382713

Mijaica Raluca. & Balint Lorand. (2013). *School Physical activities between the formal and nonformal education.* 5th International Conference EDU – WORLD 2012 – Education facing Contemporary World Issues. Procedia – Social and Behavioral Sciences 76. P.p 503 – 510. Retrieved from: https://www.researchgate.net/publication/257718937

Moses Oketch. & Thomas Weisner. (2014). *Non formal Education and Learning*. Retrieved from: https://www.researchgate.net/publication/305249233

Oznur Isir Yarkatas, & Metin INCE. (2016). *Formal and Non formal Education in design*. Design and new media: Selected Articles. Retrieved from: https://www.researchgate.net/publication/342178494

Radhika Kapur. (2018). *Non formal Education*. Retrieved from: https://www.researchgate.net/publication/323745512

……………….(2019). *Understanding the meaning and significance of Informal Education*. Retrieved from: https://www.researchgate.net/publication/335881723

..........................(2019). *Understanding the meaning and significance of formal Education.* Retrived from: https://www.researchgate.net/publication/335826519

………………..(2019). *Understanding the meaning and significance of Non formal Education.* Retrieved from: https://www.researchgate.net/publication/335856433

Shlomo Romi, & Mirjam Schmida. (2009). *Non formal Education: A major Educational force in the postmodern Era.* Cambridge Journal of Education. 39(2). P.p 257 – 273. Retrieved from: https://www.researchgate.net/publication/248998989

சந்தானம், எஸ். (1994) *கல்வியும் சமூகமும்.* சென்னை: சந்தா பப்ளிஸர்ஸ்.

மன்சூர்.எம்.கே.எம் (2005). கல்வித் தத்துவங்கள். ஏஏ மான்ஸ். இலங்கை.

கல்வியின் அடிப்படைகள் (2005) தொகுதி 2, இலங்கை திறந்த பல்கலைக்கழகம். நுகேகொட.